**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 14/2026 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முத்தையா | க–பெ/ த–பெ | சோலையப்பன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம் | |
| வயது: | : | 76/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | அரசு ஓய்வு | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2026**

--------------------------------------------------------------------------------------------------

<u>05.08.2026</u>

<u>குறுக்கு விசாரணை</u>

1) புகார்தாரர் எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் ஒன்றாக பணி பார்த்தோம், நண்பர் ஆவார். எந்தெந்த தேதிகளில் எதிரிக்கு பணம் கொடுத்தார் என்றால் 2021 செப்டம்பர், அக்டோபர், டிசம்பர் மற்றும் 2022 ஜனவரி ஆகும். எந்த இடத்தில் வைத்து புகார்தாரர் எதிரிக்கு கடன் கொடுத்தார் என்றால் என் வீட்டில் வைத்துக்கொடுத்தார். இந்த விபரத்தை எனது பிரமான வாக்குமூலத்தல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புரோநோட்டை யார் எழுதினார் என்றால் புகார்தாரர் எழுதினார். புரோநோட்டில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புரோநோட்டில் உள்ள கையொப்ப மையும், நிரப்பியுள்ள விபரத்தின் மையும் வேறுபட்டு உள்ளது என்றால் சரிதான். புரோநோட்டுகள் அனைத்து ஒரே நாளில் எனது வீட்டில் வைத்து எழுதப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி கடன் கொடுக்கும்போது வீட்டில் நான் மட்டும்தான் இருந்தேனா என்றால் நான், புகார்தாரர் மற்றும் எதிரி இருந்தார். புரோநோட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ளதை நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். புரோநோட் எந்த தேதியில் எழுதியது என்றால் பணம் கொடுத்த போது எழுதியது. எதிரி வழக்கு காசோலைக்காக புரோநோட் கொடுக்கவில்லை என்றாலும், பழைய கடனுக்காக நிரப்பாமல் கொடுத்த புரோநோட் என்றாலும் சரியல்ல. எதிரி அவரது

கடனை திருப்பி செலுத்தியுள்ளார் என்றாலும், புரோநோட்டை எதிரிக்கு கொடுக்காமல் தவறாக பயன்படுத்தி புகார்தாரர் தற்போதைய வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், புகார்தாரர் எனது நண்பர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.08.05 18:43:15 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,காரைக்குடி.